# அத்தியாயம் 5

## உலகின் பல்வேறு குடியிருப்புக்கள்

### 5.1 அறிமுகம்


மனிதன் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு புவியின் மீது அமைத்துக் கொண்ட உறைவிடமே குடியிருப்பு ஆகும்.

ஆரம்பகால மக்கள் இயற்கையுடன் ஒன்றிணைந்து வாழ்ந்ததுடன், வேட்டையாடு வதையும் மந்தை மேய்ப்பதையும் தமது வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டிருந்ததால் வாழ்க்கை முறையை நிரந்தரமாக ஓர் இடத்தில் அமைத்துக் கொள்ளவில்லை. விவசாயம் படிப்படியாக விருத்தியடைந்த போது பெரும்பாலான மக்கள் நிரந்தரமாக தங்கிவாழ முற்பட்டதிலிருந்து குடியிருப்புக்கள் உருவாகின. இந்த வகையில் குடியிருப்புக்களை மனிதன் அமைத்துக் கொண்டதன் நோக்கங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

- சூழலில் ஏற்படும் பல்வேறு துன்பங்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளல்.
- இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பாக வாழ்தல்.
- அமைதியாக வாழ்க்கையை நடாத்துதல்.


மேற்கூறிய சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதன் குடியிருப்புக்களை நிரந்தரமாக அமைத்துக் கொண்டான்.

### குடியிருப்பில் காணப்படும் முக்கிய அம்சங்கள்



எல்லாக் குடியிருப்புகளிலும் மேற்குறிப்பிடப்பட்ட அம்சங்களை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் காணமுடியாது. ஒரு குடும்பமோ அல்லது பல குடும்பங்களோ ஒன்று சேர்ந்து வாழும் போது, குடியிருப்புக்கள் ஏற்படுகின்றன. குளிர் அதிகமாகவுள்ள நாடுகளில் கோடை காலங்களில் நீர் உள்ள இடங்களிற்கு அண்மையில் தற்காலிகமாக மக்கள் வசிக்கும் பகுதிகளும், போர்க்காலங்களில் இடம் பெயர்ந்த மக்கள் வாழும் அகதி முகாம்களும் குடியிருப்புக்குள் அடங்குகின்றன. குடியிருப்புக்கள் விருத்தி அடைவதில் பௌதிக, பொருளாதார, சமூகக்காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. குடியிருப்பு என்பது வசிப்பிடங்கள் மட்டுமன்று, மனிதனின் பொருளாதார, சமூக, கலாசார, நடவடிக்கைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நடவடிக்கைகள், கைத்தொழிற் சாலைகள், வழிபாட்டிடங்கள், நிறுவனங்கள், களஞ்சியசாலைகள் பல்வேறு கட்டடங்கள், கடைத்தொகுதிகள், வீட்டுத்தோட்டங்கள், பூங்காக்கள், பயிர்செய்கை நிலங்கள், விளையாட்டு மைதானங்கள், வீதிகள், கால்வாய்கள், மின்சார கம்பிகள், நீர்க்குழாய்கள் என்பனவும் குடியிருப்புக்களில் காணப்படும் அம்சங்களாகும். குடியிருப்புகள் பற்றிய வளர்ச்சிக் கோலங்கள், மாற்றங்கள் பற்றிய விளக்கத்தினை இவ்வத்தியாயத்தின் மூலம் அறிந்து கொள்வோம்.

## 5.2 குடியிருப்புக்களின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்



## 5.3 உலகின் குடியிருப்பு வளர்ச்சி

உலகின் முதல் குடியிருப்புக்கள் ஆற்றங்கரையை அண்டிய பிரதேசங்களிலேயே ஏற்பட்டன. மனிதனின் அத்தியாவசியத் தேவைகள் இப்பகுதிகளில் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தபோது ஆற்றங்கரைகளை அண்டிய பகுதிகள் மக்கள் கூட்டம் வாழுமிடமாக மாறின. மிகப்புராதன காலத்தில் கால்நடைவளர்ப்பு முறையாக நாடோடி மந்தை மேய்த்தலாகக் காணப்பட்டது. இத்தொழிலை மேற்கொண்டோர் நிரந்தரமான வதிவிடங்களை அமைத்து வாழவில்லை. இவர்கள் மந்தைகளோடு நாடோடிகளாக அலைந்து திரிந்தனர். காலப்போக்கில் இதனால் ஏற்பட்ட வசதியீனம் காரணமாக ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லப் போக்குவரத்துப்பாதைகளை அமைத்துக் கொண்டு நிரந்தரமான குடியிருப்புக் களையும் அமைத்துக் கொண்டார்கள். இது சிற்றூர்களாக மாறி காலப்போக்கில் சனத்தொகை அதிகரிக்க சிதறி அமைந்த சிற்றூர்கள் குக்கிராமங்களாக மாறின. இதில் ஏற்பட்ட விருத்தியே கிராமமாகும். இக்கிராமங்கள் கட்டடங்கள், போக்குவரத்து வசதி, கோயில், பாடசாலை, வைத்தியசாலை, தபாற்கந்தோர் போன்ற வசதிகளைத் தனக்கே உரித்தாக்கிக் கொண்டன. இக்கிராமங்கள் பல ஒன்றிணைந்து சிறு நகரமாக உருவாகின. இச் சிறிய நகரத்தொகுதிகளில் பிரதான வீதி, சிறு வீதி, கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், பொலிஸ் நிலையம், பாடசாலை, கோவில் என்பன அமைந்து காணப்பட்டன. சிறிய நகரத்தொகுதிகள் ஒன்றிணையும் போது பாரிய நகரப் பிரதேசங்கள் தோன்றின.

இவ்வாறு ஆரம்பத்தில் காணப்பட்ட விவசாயப் பண்ணைகளில் இருந்து நகரத்தொகுதி வரை வளர்ச்சியடைந்த குடியிருப்புக்களை உலகின் பல பாகங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் ஆரம்பத்தில் தோற்றம்பெற்ற எல்லாக் குடியிருப்புக்களும் இவ்வாறு வளர்ச்சி பெற்றனவாகக் காணப்படவில்லை. குடியிருப்புக்கள் குறிப்பிட்ட காலத்தில் வளர்ச்சியடைந்து கைவிடப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. உதாரணமாக அப்பிரதேசத்தில் கிடைக்கும் வளங்கள் (கனியவளம், நீர்) முடிவடைந்த பின்னர் அதனை கைவிட்டுச் சென்ற குடியிருப்புக்கள் பலவும் உள்ளன. அத்துடன் இயற்கை அனர்த்தங்கள் (எரிமலை, மண்சரிவு), போர் நடவடிக்கைகள் காரணமாகவும் குடியிருப்புக்கள் கைவிடப்பட்டன.


## 5.4 குடியிருப்பு வகைகள்

உலகின் காணப்படும் குடியிருப்புக்களை மூன்று பிரதான வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. கிராமம் (Rural)
2. நகரம் (Urban)
3. கிராமநகரம் (Rurban)

இவற்றின் படிமுறை வளர்ச்சியைப் பின்வரும் உரு 5.3 காட்டுகின்றது.

**குடியிருப்புக்களின் படிமுறை வளர்ச்சி**




### செயற்பாடு

1. பரப்பளவிற்கு ஏற்ப பின்வரும் குடியிருப்புக்களை ஒழுங்குபடுத்தி எழுதுக (கிராமம், விவசாயப்பண்ணைக்கிராமம், குக்கிராமம், நகரம், நகரத்தொகுதி)
2. கிராமக்குடியிருப்பு ஒன்று உபநகர குடியிருப்பாக மாறும் போது ஏற்படும் மாற்றங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.
3. நகரம், நகரத்தொகுதி, கிராமம் என்ற குடியிருப்புக்களின் பண்புகள் மும்மூன்றினை குறிப்பிடுக.
4. குடியிருப்புக்கள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் பௌதிக காரணிகள் 4 இனையும் சமூகப் பொருளாதார காரணிகள் 4 இனையும் எழுதுக.

**குடியிருப்புக்களில் காணப்படும் வெவ்வேறு பண்புகளைப் பின்வரும் அட்டவணை 5.1 காட்டுகின்றது.**


| அட்டவணை 5.1 | **உலகில் காணப்படும் குடியிருப்புக்களின் பண்புகள்** | | |
|---|---|---|---|
| | குடியிருப்புகளின் வகைகள் | | |
| குடியிருப்புக்களின் பண்புகள் | கிராமியக் குடியிருப்பு | நகரக் குடியிருப்பு | கிராமநகரக் குடியிருப்பு |
| சனத்தொகை | சனத்தொகை ஒப்பீட்டு ரீதியில் நகரங்களை விடக் குறைவு | அதிகம். | கிராமங்களை விட அதிகம் |
| சன அடர்த்தி | ஒப்பீட்டு ரீதியில் நகரங்களை விடக் குறைவு. | அதிகம் | கிராமங்களை விட அதிகம் |
| பொருளாதார நடவடிக்கை | முக்கியமாக முதனிலை உற்பத்திப் பொருட்கள் அதிகளவில் காணப்படும் | இரண்டாம் நிலை (உற்பத்தி, சேவை) உற்பத்திப் பொருட்கள் காணப்படும் | முதனிலைப் பொருளாதாரம் மாறி, இரண்டாம் நிலைப் (உற்பத்திச் சேவை) பொருளாதார நடவடிக்கை-கள் அதிகமாகக் காணப்படும் |
| செயற்பாடுகள் | முதனிலை உள்ளூர் செயற்பாட்டு நடவடிக்கைகள் அதிகம் காணப்படும். போட்டித்தன்மை குறைவாகவும் கூட்டுறவுத் தன்மை கூடுதலாகவும் காணப்படும். | நிர்வாகம்,கைத்தொழில்,நிதி, சுகாதாரம், கல்வி போன்ற பல்வேறு நடவடிக்கைகள் காணப்படும். போட்டித் தன்மை கூடுதலாகக் காணப்படும். | உள்ளூர் செயற்பாட்டு நடவடிக்கைகள் அதிகம் காணப்படும். |

| | | | |
|---|---|---|---|
| நாளாந்த நடவடிக்கைகள் | குடியிருப்புக்களைச் சுற்றிய பகுதிகளிலிருந்து தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர். | காலை நேரங்களில் கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கி வருவர். | பல்வேறு பிரதேசங்களில் காலையில் வெளியே செல்வதும், மாலையில் உள்ளே வருவதுமான நடவடிக்கை காணப்படும் உள்ளே வருவதும் மாலை நேரம் வெளியேறுதலும் தொடர்ச்சியாக நடைபெறும். |
| நகர்வு | நாளாந்த நகர்வு குறைவு | நாளாந்த நகர்வு கூட | நாளாந்த நகர்வு கிராமத்தை விட கூட நகரத்தை விட குறைவு. |
| நிலப்பயன்பாடு | கட்டிட நிர்மாணத்திற் கான நிலப் பயன்பாட்டு வீதம் ஒப்பீட்டு ரீதியில் குறைவு | கட்டிட நிர்மாணத்திற்கான நிலத்தின் அளவு குறைவு | கட்டிட நிர்மாணத்திற்கான நிலத்தின் அளவு கூடிக் கொண்டிருப்பதனால் பயிர்ச்செய்கை நிலம் குறைவு. |
| மூலம்: Advance Level Human Geography (Sinhala Medium) Pub: 1998 Education Publicatoin Department | | | |

## குடியிருப்பு கோலங்கள்


கட்டிடங்கள், இருப்பிடங்கள் என்பன பரவியுள்ள விதத்திற்கேற்ப குடியிருப்புக் கோலங்களை விபரிக்க முடியும். இத்தகைய கோலங்கள் ஏற்படுவதற்கு நீண்டகாலம் எடுக்கின்றது. இதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் பல. இவற்றுள் பௌதிக பொருளாதார, கலாசார, அரசியற் காரணிகள் என்பன முக்கியம் பெறுகின்றன. இந்த அடிப்படையில் குடியிருப்புக் கோலங்கள் பலவற்றை இனங்காணமுடியும். உலகில் குடியிருப்புக்கள் அமைந்துள்ள விதத்திற்கு ஏற்பவும் தொழிற்பாட்டிற்கு ஏற்பவும் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. சிதறல் குடியிருப்பு
2. கொத்தணிக் குடியிருப்பு




சிதறல் குடியிருப்பு


இவற்றில் காணப்படும் தெளிவான பண்புகளை அட்டவணை 5.2 காட்டுகின்றது.




அட்டவணை 5.2



கொத்தணிக் குடியிருப்பு




அட்டவணை 3

அமைவிடத்தின் அடிப்படையில் குடியிருப்புக் கோலங்களை நோக்கின்

1. நேர்கோட்டுக் குடியிருப்பு.
2. சந்திக் குடியிருப்பு.
3. நகரக் குடியிருப்பு. எனப் பாகுபடுத்தலாம்.

## நேர்கோட்டு குடியிருப்பு

இரண்டு மாநகரங்களை பிரதான வீதி இணைக்கும் போது பிரதான வீதிகளில் இருமருங்கிலும் குடியிருப்புக்கள் அமைகின்றன. மாநகரங்களில் நிலத்தின் பெறுமதி அதிகமாக இருப்பது, வாடகை அதிகமாக இருப்பது போன்ற

காரணங்களினால் மாநகரத்திற்கு வெளியே அதேவேளை மாநகரத்திற்கு பல்வேறு நோக்கங்களிற்காக செல்லும் வகையில் மாநகரங்களை அண்டிய பிரதான வீதிகளின் இருமருங்கும் குடியிருப்புகளை அமைத்துக் கொள்கின்றனர். இவ்வாறாக அமைந்துள்ள குடியிருப்புக்கள் நேர்கோட்டு குடியிருப்பாகும்.

உரு 5.1



## சந்திக் குடியிருப்பு

புகையிரதப் பாதைகள், பெருந்தெருக்கள், சந்திக்கும் இடங்களில் சந்திக் குடியிருப்புக்கள் ஏற்படும். பெருமளவில் சேவைகளை வழங்கும் பொருட்டுச் சந்தியைச் சூழ்ந்து குடியிருப்புக்கள் பரந்து காணப்படும். சந்திக் குடியிருப்புக்கள் வளர்ச்சியடையும் அதே நேரம் சேவைகளும் வளர்ச்சியடையும். மருத்துவமனைகள், பாடசாலைகள், அஞ்சல் அலுவலகம் போன்ற சேவை நிறுவனங்களும் இங்கு வளர்ச்சியடையும்.

உரு 5.2



## நகரக் குடியிருப்பு

நகரப் பிரதேசங்கள் சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசங்களாகும். இடநெருக்கடி காரணமாக நிலப்பிரச்சினை ஏற்படுவதால் கிடையான கட்டிட விரிவு குறைந்து கட்டிடங்களின் குத்தான வளர்ச்சி காணப்படும். இங்கு பயிர்ச் செய்கையைத் தவிர வேறு தொழில்களை மேற்கொள்ளும் மக்கள் அதிகமாக வாழ்கின்றனர். இந்நகரக் குடியிருப்புக்கள் அருகில் உள்ள குடியிருப்புகளிற்கும் சேவைகளை வழங்குகின்றன. சேவை மத்திய நிலையமாக நகரம் விளங்குவதால் வங்கி, அஞ்சல் அலுவலகம், கைத்தொழில், நிர்வாக நிலையங்கள் வளர்ச்சி அடைகின்றன.

உரு 5.3



இங்கு குறைந்த வருமானம் பெறுவோர் சேரிகளில் வசிப்பதைக் காணலாம். நகரங்களில் வேலை வாய்ப்பு அதிகம் உண்டு. நகரங்களில் சேவை நிலையங்கள் (மருத்துவ சாலை, பாடசாலை, போக்குவரத்து) மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மிகையான வளர்ச்சியை அடைந்துள்ளதால், இச்சேவைகளைப் பெறும் நோக்கில் மக்கள் நகரத்தை நோக்கி இடம்பெயருகின்றனர்.

உலகில் சனத்தொகை அடிப்படையில் பல்வகை நகரவகைகள் தோற்றம் பெற்றுள்ளன.அதனை பின்வருமாறு நோக்கலாம்.

**சிறிய நகரங்கள் (Small Towns)**
- 20000 க்கு மேற்பட்ட மக்களை கொண்டிருக்கும் பகுதி.

**நடுத்தர நகரங்கள் (Medium or Intermediate Towns)**
- 20,000-100,000 வரையான மக்களை கொண்டிருக்கும் பகுதி.

**மில்லியன் நகரங்கள் ( Million cities)**
- 1 மில்லியன் - 10 மல்லியன் வரையான மக்களை கொண்டிருக்கும் பகுதி.

**மெகா நகரங்கள் (Mega Cities)**
- 10 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களைக் கொண்டிருக்கும் பகுதி.

**குடியிருப்புக் கோலங்கள்**



நகரம் (உரு 5.4)



கிராமம் (உரு 5.5)

தொழிற்பாடுகளின் அடிப்படையில் உருவாகியுள்ள குடியிருப்பு கோலங்களை நோக்கின்,

1. கைத்தொழில் நகரம்.
2. துறைமுக நகரம்.
3. கலாசார நகரம்.
4. சேவை நகரம்
5. வர்த்தக நகரம். எனப் பாகுபடுத்தலாம்

## கைத்தொழில் நகரம்

உரு 5.6



18ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோன்றிய கைத்தொழில் புரட்சி 19ம் நூற்றாண்டில் வேகமாக ஏனைய நாடுகளிற்கும் பரவியது. மூலப் பொருட்கள்,வலு, தொழிலாளர்வசதி, நீர் வளம், சந்தை வசதி, போக்குவரத்து, அரச பூட்கை என்பன கைத்தொழிற் சாலைகளை ஓரிடப்படுத்தும் முக்கிய காரணிகளாகக் காணப்படுகின்றன. இந்த வகையில் இவை சாதகமாக உள்ள பிரதேசங்களில் அமையும் கைத்தொழிற் சாலைகளை அண்டி மக்கள் தொகை, மக்கள் அடர்த்தி கூடுதலாக காணப்படுகின்றது. காலப்போக்கில் இப்பகுதிகள் நகரங்களாக மாறுகின்றன. உதாரணமாக ஐக்கிய அமெரிக்க நாடுகளில் பிலடெல்பியா, சிக்காக்கோ, ஐக்கிய இராச்சியத்தில் நியூகாசில் பேமிங்காம் நெற்றிங்காம், இந்தியாவில் பீகார், றூர்கெலா, பத்திராவதி, யப்பானில் ஒசாகா, யொக்ககாம, கோபே போன்ற நகரங்களைக் குறிப்பிடலாம்.

## துறைமுக நகரம்

உரு 5.7



நவீன கைத்தொழில் பொருளாதாரத்தில் துறைமுகங்கள் முக்கியமானதாகக் காணப்படுகின்றன. கப்பல் பாதைகள் ஒருங்கிணையும் பகுதிகள் துறைமுகங் களாக மாறி வருகின்றன. நவீன கைத் தொழில் பொருளாதாரத்தில் இலத்திரனியல் தொழினுட்பம் ஏற்றி இறக்கலை துரிதப்படுத்தும் வகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஏற்றி இறக்கல் தொழிலைத் துரிதமாக பயன்படுத்தும் நகரங்கள் துறைமுக நகரங்களாக மாறி வருகின்றன. உதாரணமாக தென் அமெரிக்காவில் றியோடி ஜெனிரோ, புவனஸ் அயர்ஸ், வல்பறைசோ, வட அமெரிக்காவில் நியூயோர்க், வன்கூவர், மொன்றியல், ஐரோப்பாவில் லண்டன், லிஸ்பன், ஆபிரிக்காவில் கேப்ரவுண், டேர்பன், லாகோஸ், ஆசியாவில் கராச்சி, மும்பாய், கொழும்பு, அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன், சிட்னி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

## கலாசார நகரம்

உரு 5.8



கலாசார ரீதியில் குடியிருப்புக்கள் வளர்ச்சியடைகின்றமை முக்கியமாக காணப்படுகின்றது. நாடுகளின் கலாசார விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்தல் முக்கிய தொழிற்பாடாகக் காணப்படுகின்றது. இந்த வகையில் உலகில் பல்வேறு பாகங்களில் கலாசாரத்தை பிரதிபலித்துக் காணப் படும் இடங்களை அண்டி மக்கள் குடியிருப்புக்கள் தோற்றம் பெற்று இவை நகரங்களாக மாறியுள்ளன. உதாரணமாக மக்கா, லண்டன், புதுடெல்லி, ரோம், வாஷிங்டன் என்பனவற்றைக் கூறலாம்.

## சேவை நகரம்

உரு 5.9



மூல வளங்களைக் குறைவாக கொண்ட நாடுகள் மூலதனத்தை பயன்படுத்தி வளர்ச்சி பெற்ற சேவை நகரங்களாக மாறி வருகின்றன. பல நாடுகள் சுதந்திர வர்த்தக வலயங்களை அமைத்து வெளிநாட்டு முதலீட்டாளர் -களைக் கவரும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்றன. உதாரணமாக சிங்கப்பூர்.

## வர்த்தக நகரம்

உரு 5.10



கப்பல் பாதை, விமானப்பாதை, தரைப் பாதை ஒருங்கிணையும் நாடுகள் வர்த்தக நகரங்களாகத் தோற்றம் பெறுகின்றன. இங்கு ஏற்றி இறக்கல் தொழிலை துரிதமாக மேற்கொள்ளும் பொருட்டு குடியிருப்புக்கள் அதிகரித்து இவை வர்த்தக நகரங்களாக மாறி வருகின்றன. உதாரணமாக மும்பாய், சிட்னி, கேப்ரவுன், நியூயோர்க், லண்டன், டோக்கியோ, கொழும்பு என்பவற்றைக் கூறலாம்.

### செயற்பாடு

1. நகரங்களின் சிக்கல் வாய்ந்த நடவடிக்கைகளினால் ஏற்படும் விளைவுகள் இரண்டினைக் கூறுக:
2. உலகப்புறவுருவப் படத்தில் பின்வரும் நகரங்களை குறித்துப்பெயரிடுக:

| | |
|---|---|
| 1. பேர்மிங்காம் | 9. யாம்செட்பூர் |
| 2. மஞ்செஸ்டர் | 10. டோக்கியோ |
| 3. வெனிஸ் | 11. நியூயோர்க் |
| 4. மும்பாய் | 12. கேப்ரவுண் |
| 5. கொல்கத்தா | 13. றியோடிஜெனிறோ |
| 6. சிங்கப்பூர் | 14. சிட்னி |
| 7. பாங்கொக் | 15. பபுலோ (Baffaloa) |
| 8. லண்டன் | |

## 5.5 மாற்றங்கள்

மனித வரலாற்றில் பல்வேறு யுகங்களில் குடியிருப்புக்களின் கோலங்கள் மாறி வந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.புதிய கண்டு பிடிப்புக்களின் செல்வாக்கு அதற்குக் காரணமாகும். இயற்கைச் சூழலில் வாழ்ந்த மனிதன் பயிர்ச்செய்கை முறைக்கு மாறியபோது நாகரீகம் வளர்ச்சியடையத் தொடங்கியது. விவசாய நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டதுடன் நகரங்களின் விருத்தியும் ஏற்பட்டது. கைத்தொழிற் புரட்சியின் பின்னர் நகரங்களின் விருத்தி ஐரோப்பாவில் ஏற்பட்டது. புதிய கண்டுபிடிப்புகளின் காரணமாக உலகப் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தை வர்த்தகம் பெற்றுக் கொண்டது. கைத்தொழில் வர்த்தகம் தொடர்பாக சர்வதேசத் தொடர்புகள் ஏற்பட்டதுடன் உலகில் பெருமளவு கரையோரப்பிரதேசங்கள் விருத்தி யடைந்தன. இந்த வகையில் மாற்றங்களை பின்வருமாறு இனங்காணலாம்.

1. இணைய வசதிகள் அதிகரித்தன
2. உட்கட்டமைப்பு விருத்தி காரணமாக கிராமிய குடியிருப்புக்களில் காணப்பட்டுள்ள தன்மைகள் மாறி வருகின்றன. உதாரணமாக ஸ்கொட்லாந்து பிரதேசம்
3. வர்த்தக நடவடிக்கைகளும், சுயதொழில்களின் உருவாக்கமும் குடியிருப்பு வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.
4. நாட்டின் உட்பகுதியில் காணப்படுகின்ற புராதன நகரங்களின் முக்கியத்துவம் குறைந்துள்ளன. உதாரணமாக ஜேர்மனி - பொன்

5. கரையோரங்களில் அமைந்து காணப்பட்ட தலைநகரங்களின் முக்கியத்துவம் குறைந்து, உட்புறத்தில் தலைநகரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
உதாரணம் பிறேசிலியா
5. பட்டணங்களின் வளர்ச்சி அதிகரித்து வருகின்றமை.
6. மில்லியன், மெகாநகரங்களின் வளர்ச்சி ஆசியாவில் அதிகரித்து வருகின்றமை.
7. பெரு நகரத்தொகுதிகளின் வளர்ச்சி அதிகரித்து வருகின்றது. உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா நாடுகளில் பொஸ்ரன் தொடக்கம் வாஷிங்டன் வரை, யப்பானில் டோக்கியோ தொடக்கம் யொக்ககாமா வரை.

### செயற்பாடு

1. உலகப்படத்தில் பின்வருவனவற்றை குறித்துப் பெயரிடுக:
    1. பொஸ்ரன் தொடக்கம் வாஷிங்டன் வரை அமைந்து காணப்படும் நகரங்கள்.
    2. சிக்காக்கோ தொடக்கம் பிற்ஸ்பேர்க் வரை அமைந்து காணப்படும் நகரங்கள்.
    3. டோக்கியோ தொடக்கம் யொக்ககாமா வரை அமைந்து காணப்படும் நகரங்கள்.

2. பின்வருவன நிகழ்வதற்கான காரணங்கள் இரண்டினை குறிப்பிடுக:
    1. ஆசியாவில் நகரங்களின் தோற்றமும் துரிதமான வளர்ச்சியும்
    2. கரையோர நகரங்கள் தோன்றுதல்.
    3. புதிய நகரங்கள், தலைநகரங்கள் தோன்றுதல்.

3. பின்வரும் தலைப்பின் கீழ் விவாதம் ஒன்றினை நடாத்துக.
   ‘‘உலகில் நகரங்களின் வளர்ச்சி நன்மையையே தருகின்றது’’.